கனம் திரு. பூ. கக்கன் : அதற்குத் தனியாக ஒரு கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

9-00 a.m. **திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** ஸ்டேட் லெவலில் ஏதாவது "புருட் ஸ்டேஷன்" புதியதாக ஆரம்பிப்பதற்கு திட்டம் இருந்துகொண்டிருக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கனவே போலூர்-திருக்குப்பம் ரிஸர்ச் ஸ்டேஷன் இருக்கிறது. ஆடுதுரை, கல்லார், பர்லியார் போன்ற இடங்களில் பரீட்சார்த்தமாக பரிசீலனை செய்வதற்கு ஏற்பாடு செய்யுமாறு மத்திய சர்க்காரைக் கேட்டிருக்கிறோம். ரிப்ளையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. ம. கமலநாதன் : அப்ரூவ்டு நர்ஸரி என்று சொல்லுபவர்கள் 10 செடி, 15 செடி கூட வைத்து அப்ரூவல் வாங்கிக்கொள்ளலாம். பழத்தோட்டங்கள் வைக்கிறவர்களுக்கு கன்யாகுமரி வரையிலும் எங்கள் பகுதியிலிருந்து விதைச் செடிகள் போகின்றன. லட்சக்கணக்கான செடிகள் ரயிலில் போகும்பொழுது வீணாகிவிடுகின்றன. அப்ரூவ்டு நர்ஸரிகள் பிரைவேட் பார்டி மூலம் வாங்கி விற்கிறார்கள். தனிப்பட்ட விவசாயிகள் பழத்தோட்டங்களுக்கு நல்ல செடிகள் வாங்கவேண்டுமென்று விரும்பினால், அப்ரூவ்டு நர்ஸரிகளிலிருந்து மட்ட ரகத்தை வாங்கமாட்டார்கள். அவர்களுக்கு கடன் கொடுத்து இஷ்டம்போல் பிளாண்டு பண்ணுவதற்கு ஏற்பாடு செய்ய முடியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்த முறை இப்பொழுது இல்லை.

திரு. வை. சங்கரன் : கோடைக்கானல் போன்ற இடங்களில் ஆரஞ்சுத் தோட்டங்கள் வெற்றிகரமாக நடைபெறவில்லை என்று சௌ-சௌ தோட்டமாக மாற்றுவதற்கு ஏற்பாடு செய்கிறார்கள். இதை சர்க்கார் சீக்கிரம் உணர்ந்து ஆரஞ்சுச் செடிகளுக்கு வரும் நோயைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கனவே அதிகாரிகள் கவனம் செலுத்தி வருகிறார்கள்.

Loans for orchards

* 310 *Q.*—SRI K. NARAYANASWAMI PILLAI : Will the Hon. the Minister for Home be pleased to state the amount disbursed as long-term loans, and short-term loans for the establishment of new orchards and for old orchards during 1964?

கனம் திரு. பூ. கக்கன் : 1964-ம் ஏப்ரல் முதல் 1964 டிசம்பர் முடிய புதிய பழத் தோட்டங்கள் ஏற்படுத்துவதற்காக நீண்ட காலக் கடன்களாக 2,98,449 ரூபாயும், பழைய பழத் தோட்டங்களைச் சீர் செய்வதற்காகக் குறுகிய காலக் கடனாக 50,795 ரூபாயும் வழங்கப் பட்டுள்ளன.

புலவர் கா. கோவிந்தன் : இந்த மன்றத்திலும் சரி, மாவட்ட வளர்ச்சி மன்றங்களிலும் சரி, தோட்டங்களுக்கு எவ்வளவு கடன் கொடுக்கப்பட்டது என்று கணக்கு கொடுக்கிறார்கள். வாங்கிய கடன்களை அவர்கள் எந்த அளவுக்கு பயன்படுத்தியிருக்கிறார்கள், வைத்த செடிகள் எந்த அளவுக்கு உயிரோடிருக்கின்றன என்ற அளவுக்கு கணக்கு கொடுப்பதில்லை. கொடுத்த கடன் எந்த அளவுக்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பது குறித்து ஆராய்ச்சி இல்லை. ஆகவே, அதற்கு ஒரு குழுவை அமைத்து ஆராய்ச்சி செய்வதற்கு தக்க வழிவகைகள் செய்யப்படுமா ?

23rd March 1965]

கனம் திரு. பூ. கக்கன் : அம்மாதிரி குழு அமைக்கவேண்டிய அவசியமில்லே. விவசாயப் பெருங்குடி மக்களுக்கு பழச் செடி வைப்ப தற்கு கடன் கொடுத்து 10 வருஷ தவணையில் வாங்குவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது.

திரு. ஆ. துரையரசன் : கொடுக்கப்பட்ட கடன்கள் பெரும்பாலும் ஒழுங்காக செலவழிக்கப்படுவதில்லே. பல இடங்களில் செடிகளே நடா மலேயே கூட, பணத்தை வாங்கி சொந்த உபயோகத்திற்காக பயன் படுத்தியிருக்கிருர்கள் என்று எதாவது அரசினருக்கு புகார் வந்திருக் கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : அப்படியும் சமுதாயத்தில் ஒரு சில பேர்வழிகள் இருப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோ. சி. மணி : நீண்டகாலக் கடன், குறுகிய காலக்கடன் கொடுப்பதற்கான தொகை மாவட்ட வாரியாக ஒதுக்கப்பட்டிருக்கிறதா ? அல்லது தோட்டங்கள் எங்கே அதிகமாக இருக்கிறதோ அந்தப் பகுதிகளேப் பார்த்து தரப்படுகிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : எங்கெல்லாம் பழச்செடிகள் வைப்பதற்கு விவசாயப் பெருங்குடி மக்கள் முன்வருகிருர்களோ, அதைப் பார்த்து அனுசரித்து கடன் கொடுக்கப்பட்டு வருகிறது.

Cause-way under Albert Victor Bridge, Madurai

* 311 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to open a cause-way road under he Albert Victor Bridge, Madurai City, connecting Alwarpuram and the road in front of Panagal Buildings; and

(*b*) if so, the details thereof?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) ஆம்.

(இ) மதுரை—திண்டுக்கல் சாலேயின் 298–2 மைலில் வைகை ஆற்றின் குறுக்கேயுள்ள ஆல்பெர்ட் விக்டர் பாலத்தின் வடக்குப் பக்க வழியில், ஆழ்வார்புரம் சாலேயையும் கிளேச்சாலேயையும் (கல்பாலம்) இணேக்க, நகராட்சி மன்ற நிதியிலிருந்து தாம்போகி (Cause–way) ஒன்றைக் கட்ட மதுரை நகராட்சி மன்றம் உத்தேசித்துள்ளது. இதனுல் கோரிபாளேயம் சந்திப்பில் போக்குவரத்து நெரிசல் குறையும். இத் திட்டத்திற்காக 2,76,850 ரூபாய்க்கு நிர்வாக முறையில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இவ்வேலேயை "டிபாசிட்" வேலேயாக எடுத்து நிறைவேற்றும்படி (நெடுஞ்சாலே, கிராமப் பணிகள்) தலேமைப் பொறி யாளர் அனுமதிக்கப்பட்டிருக்கிருர்கள்.

திரு. வை. சங்கரன் : எப்பொழுது இந்த வேலே எடுத்துக்கொள்ளப் படும் ? எப்பொழுது முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அட்மினிஸ்டிரேடிவ் சாங்ஷன் கொடுக்கப்பட்டு, வேலே செய்வதற்கு பி.டபிள்யு.டி. மூலம் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. எப்பொழுது வேலே ஆரம்பிப்பார்கள் என்ற திட்டமான தகவல் என்னிடம் இல்லே.

Honorarium to Municipal Councillors

* 312 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government have proposed to permit Municipalities to pay its councillors, honorarium or atleast sitting fees on the days of meeting; and

(*b*) if so, the details thereof?